**தேசிய ஆராய்ச்சி சபை - 2013**

-----------------------------------------------

தேசிய ஆராய்ச்சி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 1514/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

--------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி

நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய ஆராய்ச்சி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சனாதிபதி விருது விழாவிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 75,000 தொகையான முற்பணத் தொகை முற்பணமாக பதியப்படுவதற்குப் பதிலாக காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

2012 யூன் வரை ஆராய்ச்சி சபை இயங்கிய கட்டிடத்திற்காக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 90,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| II ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவு மற்றும் 13.3 ஆம் பிரிவு | நிரந்தர பதவி நியமனம் வழங்கப்படும் வரை தற்காலிக மாற்றீடாகவே பதில் கடமை நியமனம் இருந்த போதிலும் இதற்கு முரணாக தேசிய ஆராய்ச்சி சபையின் செயலாளர் பதவிக்காக 1999 ஆம் ஆண்டு தொடக்கமும் கணக்காளர் பதவிக்காக 2003 ஆம் ஆண்டு தொடக்கமும் பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.<br><br>பதில் கடமை நியமனத்திற்காக செலுத்தப்பட வேண்டிய படிப்பணம் அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு விஞ்சலாகாத போதிலும், இதற்கு முரணாக மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் ரூபா 303,756 தொகையான சம்பளம் செயலாளர் பதவியினதும் மீளாய்வாண்டின் போது ரூபா 90,900 தொகையான சம்பளம் கணக்காளர் பதவியில் பதில் கடமையாற்றியமைக்காகவும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ஆ) 1978 திசெம்பர் 29 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 201,871,941 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 9.2 ஆம் பிரிவு | நிறுவகத்தின் அமைப்பு வரைபடம் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.3.1 ஆம் பிரிவு | ஆராய்ச்சிச் சபை ஸ்தாபிக்கப்பட்டு 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2012 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1765 ஆம் இலக்கக் கடிதம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது பணி ஒப்படை அடிப்படையில் 6 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரம் பெறாது சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 911,390 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 அந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆராய்ச்சிச் சபையின் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 2,357,760 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 443,022 ஆக இருந்தமையால் நிதி

விளைவுகளில் ரூபா 2,800,782 தொகையான வீழ்ச்சி காணக்கூடியதாக இருந்தது. நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்குப் பதவியணியின் செலவினம் ரூபா 2,000,000 ஆல் அதிகரித்தமை முக்கியத் காரணமாகவிருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

நடைமுறைச் சொத்துக்களில் 99 சதவீதம் ஆராய்ச்சி மானியங்களுக்காக வங்கி நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட பணத்திலிருந்து பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 2006 – 2013 வரையான காலப்பகுதியின் போது தேசிய ஆராய்ச்சி சபை 247 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 919,000,000 தொகையை மானியமாக வழங்கியிருந்ததுடன் இதில் 39 ஆராய்ச்சி மானியங்களுக்காக விஞ்ஞான பெயர்ச்சுட்டி (Science Citation Index) வெளியீடுகளும் 47 ஆராய்ச்சிகளுக்காக வேறு சர்வதேச வெளியீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறே 19 ஆராய்ச்சிகள் கைவிடப்பட்டிருந்ததுடன் பூர்த்திசெய்யப்பட்ட 74 ஆராய்ச்சிகளுக்காக மாத்திரம் பேட்ரன்ட் உரிமை பெறப்பட்டிருந்தது.

(ஆ) 03 வருட கால எல்லையில் திறைசேரியின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் இறுதி விளைவு ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சி விளைவு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராமையும் பேட்ரன்ட் உரிமை பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையாலும் ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்ட பணத்திற்கு உரிய பெறுமதி கிடைப்பதில்லையென அவதானிக்கப்பட்டது.

(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டின் போது 60 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக ரூபா 273,000,000 தொகையான ஏற்பாடு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 41 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 217,000,000 தொகை மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது விஞ்ஞான பெயர்ச்சுட்டி (Science Citation Index) வெளியீடு மேற்கொள்ளப்பட்டிருந்த 350 ஆராய்ச்சிகளுக்காக விருது வழங்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ஒரு விருதேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பட்டப் பின்படிப்பைப் பின்பற்றும் 60 மாணவர்களைப் பதிவு செய்துகொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 36 பட்டதாரி மாணவர்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

## 4.2 முகாமைத்துத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டிற்கு முன்னர் சனாதிபதி செயலகத்தின் கீழ் ஆராய்ச்சி நிறுவகமாக நிலவிய தேசிய ஆராய்ச்சி சபை, 2007 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 1514/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சனாதிபதி விசேட ஏற்பாடுகளின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சனாதிபதி விசேட ஏற்பாடுகளில் காண்பிக்கப்பட்டவாறு சேவைக்குறிப்பின் மூலம் ஆராய்ச்சி சபை ஒன்றை ஸ்தாபிக்கும் வரை இந் நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சேவைக்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு நியதிச்சட்ட நிறுவகமாக ஆராய்ச்சிச் சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட உடன்படிக்கையின் 06 ஆம் பிரிவின் படி பூர்த்தியடைந்த செயற்திட்டத்திற்காக திறைசேரி ஏற்பாடுகளின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள்/ உபகரணங்கள் மீள தேசிய ஆராய்ச்சி சபைக்கு பொறுப்பேற்கப்படவோ அல்லது உரிய ஆராய்ச்சி நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்படவோ அல்லது வேறு ஆராய்ச்சிச்

செயற்திட்டத்திற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பூர்த்திசெய்யப்பட்டிருந்த 06 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 13,233,927 தொகையான சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது ஒப்படைக்கப்பட்ட ரூபா 100,819,092 தொகையான சொத்துக்கள் முறையாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டக் காலப்பகுதி முடிவுற்றதை அடுத்து 11 ஆராய்ச்சிகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை 1 முதல் 4 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் உரிய மதிப்பீட்டு நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2007, 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளுக்காக சனாதிபதி விருது விழா 2011 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படுவதற்காக திட்டமிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் விருது விழா நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதற்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி முறையே ரூபா 1,550,000 தொகையும், ரூபா 2,730,000 தொகையும், ரூபா 1,000,000 தொகையுமான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் விருது விழா 2014 ஆம் ஆண்டின் போதே நடாத்தப்பட்டிருந்தன.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேசிய ஆராய்ச்சிச் சபையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக திறைசேரி ஏற்பாடுகள் வழங்கப்படுகையில் ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே 03 ஆண்டு காலப்பகுதிக்குரிய மொத்த ஏற்பாட்டுத் தொகையும் உரிய செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதுடன் கடந்த சில வருடங்களாக வங்கி நடைமுறைக்

கணக்கு மீதிகள் பரீட்சிக்கப்படுகையில் நடைமுறைக் கணக்குகளில் பின்வருமாறு தொடர்ந்து கூடுதலான தொகை விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகை | வங்கி நடைமுறைக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2011 | 200,000,000 | 268,113,399 |
| 2012 | 220,000,000 | 346,873,287 |
| 2013 | 217,000,000 | 396,340,514 |

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட 18 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தொகையில் பாரியளவு தொகை செலவிடப்படாது எஞ்சியிருந்தமை நடைமுறைக் கணக்குகளின் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. சில செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன் அவ் ஏற்பாடுகளும் நீண்ட காலமாக வங்கிக் கணக்குகளில் செயற்பாடற்றுக் காணப்பட்டன. இதன் படி ரூபா 23,736,730 தொகை 2009 முதல் 2013 வரையான 03 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக முகாமைத்துவத்தால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 ஆண்டுகளான செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்டத்திற்குத் தேவையான உபகரணங்களையும் இரசாயனப் பொருட்களையும் விரைவாகக் கொள்வனவு செய்து ஆராய்ச்சி நடவடிக்கைகள் உரிய காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டக் காலப்பகுதி பூர்த்தியடைந்து 2012 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட நடைமுறைக் கணக்குகள் முடிவுறுத்தப்பட்ட 08 – 29 செயற்திட்டங்களுக்காக தேசிய ஆராய்ச்சிச்

சபையின் வங்கிக் கணக்கிலிருந்து 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 217,785 தொகையான இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) செயற்திட்ட உடன்படிக்கையின் 8(1) மற்றும் (11) ஆம் பந்தியின் படி கைவிடப்பட்ட மற்றும் பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டங்கள் தொடர்பில் வங்கி நடைமுறைக் கணக்குகள் விரைவாக மூடப்பட வேண்டியதுடன் அக் கணக்குகளில் எஞ்சிய தொகை விரைவாக மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் ரூபா 38,659,69 கூட்டுத்தொகையான ஆராய்ச்சி மானியங்களைப் பெற்ற 18 ஆராய்ச்சியாளர்களின் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் அவ் வங்கி நடைமுறைக் கணக்குகள் விரைவாக மூடப்பட்டு எஞ்சிய தொகை மீளக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) (i) மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சித் துறைக்காக தேசிய ஆராய்ச்சி சபை மற்றும் தனியார் பிரிவு 50 சதவீதப்படி பங்களிப்புச் செய்ததுடன் “ அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளினதும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக” 04 செயற்திட்டங்களின் கீழ் 04 தனியார் கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. செயற்திட்டக் கால எல்லை 03 ஆண்டு காலப்பகுதிகளானதுடன் செயற்திட்ட ஆரம்பத் தினமாகிய 2013 மே 17 ஆம் திகதி 04 செயற்திட்டங்களுக்காக தேசிய ஆராய்ச்சி சபையின் பங்களிப்புத் தொகையான ரூபா 45,798,008 தொகை ஒரே தடவையில் நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு ஏற்பாடுகள் அவ்வப்போது விடுவிக்கப்படுவதற்குப் பதிலாக ரூபா 45 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை ஒரே தடவையில் விடுவிக்கப்பட்டதனால் அரசாங்கப் பணம் செயற்பாடற்று நடைமுறைக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ii) செயற்திட்ட வங்கி நடைமுறைக் கணக்குகளின் ஆய்வின் போது 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வங்கிக் கணக்குகளின் மீதி ரூபா 41,948,125 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு செயற்திட்டத்திற்காக (12 - 18 செயற்திட்டம்) உபகரணம் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்கு 2013 திசெம்பர் 18 ஆம் திகதி கடன் கடிதம் ஆரம்பிக்கப்பட்டதைத் தவிர 04 செயற்திட்டங்களுக்காக வேறு எவ்வித செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்ட உடன்படிக்கையின் படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் உரிய 04 தனியார் கம்பனிகளும் பங்களிப்புத் தொகையாக ரூபா 23,465,600 கூட்டுத்தொகையை வங்கியிலிட வேண்டிய போதிலும் ரூபா 3,937,588 தொகை மாத்திரமே வங்கியிலிடப்பட்டிருந்தது.

(iv) உடன்படிக்கையின் II ஆம் அத்தியாயத்தின் படி 06 மாதங்களுக்கு ஒரு தடவை தனியார் கம்பனியால் ஆறு மாத முன்னேற்ற அறிக்கை தேசிய ஆராய்ச்சி சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்டத்திற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 78,370,921 தொகையில் ரூபா 32,572,913 தொகை மேற்குறித்த செயற்திட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாது ஆராய்ச்சிச் சபையின் வேறு செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) ஆராய்ச்சிச் சபையின் செயலாளர் பதவிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மாதாந்தச் சம்பளம் ரூபா 38,530 தொகையான போதிலும் இதற்காக ஓர் உத்தியோகத்தர் ஆட்சேர்க்கப்படாது அடிப்படைக் கல்வி நிறுவகத்திலிருந்து

விடுவிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் செயலாளர் பதவியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் மாதாந்தம் ரூபா 73,367 படி படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்காக ரூபா 243,860 மிகையான தொகை ஆராய்ச்சிச் சபை செலவு செய்ய வேண்டியிருந்தது.

(ஆ) ஆராய்ச்சிச் செயற்திட்டத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள் செயலிழந்திருந்தமையால் அவ் உபகரணம் 2009 யூலை மாதம் மீளக் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவகத்திடமே ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக மேலும் பெறப்பட வேண்டியிருந்த தொகையான ரூபா 150,869 தொகை நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் உபகரணத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்த பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 159,000 தொகை முன்னைய ஆண்டின் போது கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4.5 நோக்கங்களுக்கு முரணான செலவினங்கள்

2007 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 1514/28 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் படி அறிவு மற்றும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் தேசிய ஆராய்ச்சி சபையின் அடிப்படை நோக்கான போதிலும் இதற்கு மாறாக 2 சந்தர்ப்பங்களிற்காக ரூபா 1,250,000 தொகை சபையால் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற பதவியணியில் 9 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) தேசிய ஆராய்ச்சி சபையின் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்றுப் பதவியான செயலாளர் பதவி 1999 ஆம் ஆண்டிலிருந்தும் கணக்காளர் பதவி 2003 ஆம் ஆண்டிலிருந்தும் வெற்றிட நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆராய்ச்சி சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக 2006 ஆம் ஆண்டு முதல் பணி ஒப்படைப்பு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 05 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்கள் நிரந்தர பதவிகளில் நியமிக்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 வெற்றியளிக்காத செயற்திட்டங்கள்

ரூபா 15,682,293 கூட்டுத்தொகையைச் செலவிட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 07 செயற்திட்டங்களுக்குரிய ஆராய்ச்சி அறிக்கைகள் ஆராயப்பட்டதை அடுத்து அச் செயற்திட்டங்கள் வெற்றியளிக்காத செயற்திட்டங்கள்/ திருப்தியற்ற செயற்திட்டங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 5. கணக்கணிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகல்

2011 ஆம் ஆண்டின் போது ரூபா 32,290,822 கூட்டுத்தொகைப் பெறுமதியான 04 உபகரணங்கள் கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகிக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நோக்கங்களுக்காக உரிய அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டு ஆய்வு

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதீட்டுச் செலவினத்திற்கு மிகையாக உள்ளபடியான செலவினம் 13 சதவீதத்திலிருந்து 82 சதவீதம் வரை அதிகரித்திருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சி மானியம்

(ஆ) சொத்து முகாமைத்துவம்

(இ) கணக்கீடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) செயற்திட்ட முகாமைத்துவம்